# கேட்பாரின்றி வெட்டப்படும் மரங்களைக் காப்போம்!

கோவை, ஜூன் 4: கோவையில் கேட்பாரின்றி மரங்கள் தொடர்ந்து வெட்டப்படுவதைத் தடுக்கும் வகையில், கண்காணிப்புக் குழு அமைக்கக் கோரி, 25 அமைப்புகள் ஒன்றுசேர்ந்து ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தின.

கோவையில் நகர மேம்பாடு, சாலை விரிவாக்கம், மக்களுக்கு இடையூறு என்ற காரணங்களுக்காக, இதுவரை ஆயிரக் கணக்கான மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. இதில் பல மரங்கள் தனிநபர் லாபத்துக்காக வெட்டப்பட்டுள்ளதாக இயற்கை ஆர்வலர்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பினர் தொடர்ந்து கூறி வருகின்றனர். கடந்த 10 நாட்களுக்கு முன்பு ஆட்சியர் அலுவலகத்தில், சுமார் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரச மரம் வெட்டப்பட்டது. இது இயற்கை ஆர்வலர்கள், சுற்றுச்சூழல் பாகாப்பு அமைப்பினரிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

அந்த ஆரவாரம் அடங்குவதற்குள், கோவை கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் உள்ள பூங்காவில் 10க்கு மேற்பட்ட மரங்கள் வெட்டப்பட்டன. சம்பந்தப்பட்ட உதவி ஆணையரோ 'பட்டுப் போன 2 வாகை மரங்களை வெட்டுவதற்குத்தான் ஒப்பந்ததாரருக்கு அனுமதி கொடுத்ததாகக் கூறுகிறார்.

மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகக் கூறப்படும் மரங்கள் வெட்டப்படும்போது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் யாரும் குறிப்பிட்ட இடத்தில் இருப்பதில்லை; கண்டுகொள்ளாமல் ஒதுங்கி விடுகின்றனர். இதனால் பூங்காவில் இருந்த 10க்கு மேற்பட்ட மரங்கள் வெட்டப்பட்டன.

கல்லூரி மாணவர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சென்று மரம் வெட்டுவதை படம் எடுக்க முயன்றபோது வெட்டியவர்கள் ஓடிவிட்டனராம். மக்களுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தாத மரங்களை, வணிக வளாகங்களை மறைக்கின்றன என்ற ஒரே காரணத்திற்காக வெட்டுவதற்கு அதிகாரிகள் அனுமதி வழங்கிவிடுகின்றனர் என்பது தொடரும் குற்றச்சாட்டு.

இதையடுத்து, சேவ் வெட் லேண்ட்ஸ், ஓசை, மாற்றம்; வம்சவிருக்ஷா, ராக், சிறுதுளி, களம், தோழர் அறக்கட்டளை, மரம் வளர்ப்போர் சங்கம், மாசு விழிப்புணர்வு இயக்கம், சிறுதொழில் முனைவோர் சங்கம், அனைந்திந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்து விவசாயிகள் சங்கம், அனைத்து மாணவர்கள்- வழக்கறிஞர்கள்- அனைத்து பத்திரிகையாளர்கள் கூட்டுக்குழு, பெரியார் திராவிடர் கழகம், மதிமுக, நாம் தமிழர் இயக்கம், முஸ்லிம் லீக் உள்ளிட்டவை இணைந்து 25க்கு மேற்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மரம்வெட்டுவதைத் தடுக்கவும், இடையூறாக உள்ள மரங்களை அப்புறப்படுத்தவதற்கு முன்பு ஆய்வு செய்ய வலியுறுத்தியும், அதற்கென இயற்கை ஆர்வலர்கள், சூழல் அமைப்புகள், சமூக சேவகர்கள் அடங்கிய குழு அமைக்கக் கோரியும் மனு அளித்தனர்.

## கோவையில் 25 அமைப்புகள் இணைந்து போராட்டம்



கோவை நகரில் தொடர்ந்து மரங்கள் வெட்டுவதைக் கண்டித்து, ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்திய 25 அமைப்புகளைச் சேர்ந்தோர்.